# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI
## OS. No.179/2019
## DW – 3

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : | N.C.மகேந்திரன் | | : |
| **Father Name** | : | சின்னச்சாமி | | : |
| **Village** | : | | **Calling** | : |
| **Taluk** | : | | **Age** | : /2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of September 2025)**

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 5–ம் பிரதிவாதி மற்றும் பிரதிவாதி தரப்பு 3–வது சாட்சி ஆவேன். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1. 16.07.2014–ம் தேதியிட்ட எனது பெயரிலுள்ள கிரையப் பத்திரம் ஆவண எண்.7230/2014–ன் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7
2. 15.02.2011–ம் தேதியில் வாதியும், அவரது தாயார், 1–ம் பிரதிவாதி மற்றும் சண்முகசுந்தரம் ஆகியோர்கள் பிரதிபிரயோஜனம் பெற்றுக்கொண்டு விட்டதற்காக 4–ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ரசீது அசல் பி.வா.சா.ஆ.8
3. 03.09.2019–ம் தேதியில் கும்பகோணம் சிட்டி யூனியன் வங்கிக்கு நான் ஏற்படுத்திக் கொடுத்த அடமானக்கடன் ஆவண எண்.12309/2019–ன் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.9
4. 26.08.2020–ம் தேதியில் கும்பகோணம் சிட்டி யூனியன் வங்கிக்கு நான் ஏற்படுத்திக் கொடுத்த அடமானக்கடன் காலநீட்டிப்பு ஆவண எண்.8014/2020–ன் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.10

5. 2015-ம் வருடத்தில் தாவா சொத்தில் குடிநீர் இணைப்பு பெற்றதற்காக பெருமாநல்லூர் ஊராட்சியில் எனது பெயருக்கு வழங்கப்பட்ட வீட்டு குடிநீர் கட்டண அட்டை அசல் பி.வா.சா.ஆ.11

6. தாவா சொத்தில் உள்ள குடிநீர் இணைப்புக்கு எனது பெயரில் செலுத்திய குடிநீர் கட்டண ரசீதுகள் எண்ணிக்கை-5 அசல் பி.வா.சா.ஆ.12

7. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு நான் கிரையம் பெற்றதற்கு பின்னிட்டு நாளது தேதி வரை எனது பெயரில் செலுத்திய வீட்டு வரி ரசீதுகள் எண்ணிக்கை -9 அசல் பி.வா.சா.ஆ.13

8. தாவா சொத்திற்கு 2024-2025-ம் ஆண்டிற்கு எனது பெயரில் செலுத்திய சொத்து வரி ரசீதுகள் எண்ணிக்கை -2 அசல் பி.வா.சா.ஆ.14

9. 11.05.2022-ம் தேதியிட்ட கணினி மூலம் பெறப்பட்ட எனது பெயரிலுள்ள பட்டா எண்.536-ன் கணினி நகல் பி.வா.சா.ஆ.15

10. 19.09.2025-ம் தேதியிட்ட கணினி மூலம் பெறப்பட்ட எனது பெயரிலுள்ள பட்டா எண்.536-ன் கணினி நகல் பி.வா.சா.ஆ.16

மேற்கண்ட சான்றாவணங்களை எனது தரப்பு சான்றாவணங்களாக ஏற்றுக்கொண்டு வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**(குறுக்கு விசாரணைக்காக வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR

Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.22 14:46:50 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**